REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

திராவிட முன்னேற்றக் கழகத் தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 14உ வெள்ளி (26—4—57) ★ வெளியூர்: சித்திரை 15உ சனி (27—4—57) இதழ் [273

பிர்லாவும் - கேரளத் தொழில் நிர்மாணமும்!

'அவர் அறிவிப்பைப் படித்தேன்— அது சரியாக இருக்கக் கண்டேன்'

'தொழிற்சாலை துவங்க இந்தியப்பேரரசே எனக்கு ஆலோசனை கூறியிருக்கிறது'

'நார் பட்டுக்கான கூழ் உற்பத்தி பற்றிய ஆராய்ச்சி முடிவதற்குள் ஆட்சி கைமாறிவிட்டது'

'அங்கு என்னுடைய நிலை என்ன என்பதில் எனக்கு நிச்சயமில்லை'

'கேரள ஆட்சி என்னை அணுகினால் மேலும் விளக்கம் கேட்பேன்'

தொழில் அதிபர் பிர்லா பேசுகிறார்

பம்பாய், ஏப். 25—

"கேரளத்தில் பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, நிலம்பூர் காட்டுப் பகுதியில் நார்பட்டுக்கான கூழ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கும்படி, இந்தியப் பேரரசு எனக்கு ஆலோசனை கூறியது.

"அதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் அங்கு ஆராயத் தொடங்கினோம்; அதற்குள் புதிய கட்சி ஆட்சிக்கு வந்தது. துவங்கிய ஆராய்ச்சி முற்றுப்பெறாமலே இருக்கிறது.

"அங்கு என் நிலை என்ன என்பதில் எனக்கு நிச்சயமில்லை. இத்துறையில் கேரள ஆட்சி என்னை அணுகினால், மேலும் விளக்கம் தரும்படி நான் கோரக்கூடும்,"

இவ்வாறு, தம் நிருபரிடம் தொழிலதிபர் ஜி. டி. பிர்லா கூறியுள்ளதாக 'இந்து' இதழ் அறிவித்துள்ளது.

மேலும் அவர் இதுபற்றி குறிப்பிட்டிருப்பதாவது:—

"என்னால் இயன்றவரை கேரள மாநிலத்திற்கு உதவி செய்ய விரும்புகிறேன். கேரள புதிய அமைச்சரவையைச் சேர்ந்த தொழிலமைச்சர் வெளியிட்டுள்ள அறிவிப்பைக் கண்ணுற்றேன். அது சரியாக இருக்கிறது என்றும் உணர்ந்தேன்."

'எந்தத் தொழிலை நிறுவ முடியும்?' எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, 'அங்கு மூங்கில் அமோகமாகக் கிடைக்கிறது; எனவே, கூழ் மாவு தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவங்குவது சாத்தியமாகும்' என்று பிர்லா பதில் தந்துள்ளார்.

பொதுத் தேர்தலில் ஏற்பட்ட 'நிலை குலைவு'

'குறைத்து மதிப்பிட காங்கிரசுத் தலைவர்கள் முனையக்கூடாது'

காங்கிரஸ் சரிவு பற்றி பிர்லாவின் கண்கலக்கம்

"கேரளம், ஒரிசா, மகாராட்டிரம் ஆகிய மூன்று இடங்களிலும் பொதுத் தேர்தலில் ஏற்பட்ட 'நிலை குலைவை' காங்கிரசுத் தலைவர்கள் குறைத்து மதிப்பிடக் கூடாது. மொத்தம் பதிவான வாக்குகளில் 48 சதவிகித வாக்குகளை நாம் பெற்றிருந்த போதிலும், மேற்படி இடங்களிலிருந்து தெரியும் 'அபாய அறிவிப்பை'க் காங்கிரசுத் தலைவர்கள் மறந்துவிடக்கூடாது."

இக்கருத்தை, தாம் 'பத்ம விபூஷன்' பட்டம் பெற்றதைப் பாராட்டுவதற்காக, பம்பாய் மாநில காங்கிரசுக் குழு சார்பில் நடத்தப்பட்ட கூட்டத்தில், தொழிலதிபர் பிர்லா வெளியிட்டுள்ளார்.

மேற்படி மாநிலங்களில் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள தோல்விக்கான காரணங்களை அகற்றி, கட்சியை உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் கண்டறிய வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

சென்ற சில ஆண்டுகளில் இயற்றப்பட்டுள்ள எண்ணத் தொலையாத சட்டங்கள், அதிகக் குழப்பத்தையும், மிகுதியான தவறு செய்வதற்கான வாய்ப்புகளையும், நிர்வாகக் குழப்பங்களையும் உருவாக்கி இருக்கின்றன என்றும் அவர் கருத்தறிவித்துள்ளார்.

முதல் சுதந்திரப் போர் நூற்றாண்டு விழா

சென்னை, ஏப். 25—

இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவையும், இந்தியா சுதந்திரம் அடைந்ததின் 10-வது ஆண்டு விழாவையும் ஆகஸ்டு 15, 16 ஆகிய இரு நாட்களிலும் கொண்டாடுவதென இந்திய அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது.

இந்தக் கொண்டாட்டத்திற்கான திட்டங்களை வகுக்க மாநில அரசாங்கம், காமராசரைத் தலைவராகக்கொண்டு 14 பேர் அடங்கிய குழு ஒன்றை அமைத்திருக்கிறது.

பல தொழில் கல்வி நிலையம்

பம்பாயிலேயே நிறுவப்படும்

பாரீஸ், ஏப். 25—

ஐ. நா. கல்வி-சமுதாய-கலாச்சார நிறுவனம் மேற்கொண்டுள்ள பல தொழில் கல்வி நிலைய அமைப்புப் பணியில் மூன்று சோவியத் விஞ்ஞானிகளும் அங்கம் வகிப்பார்கள் என்றும், இந்த உயர்ந்த தொழிற் கல்வி நிலையம் பம்பாயில் போவாய் என்ற பகுதியில் நிறுவப்படுமென்றும் தெரிய வருகிறது.

பாலம் அமைப்பதற்கு ரூ. 70 இலட்சம்?

படகு விபத்து எதிரொலி

ஐதராபாத், ஏப். 25—

பத்ராசலத்திற்கு அருகே கோதாவரி ஆற்றில் ஏற்பட்ட படகு விபத்து குறித்து விசாரணை நடத்த ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கோதாவரி நதியின்மீது பாலம் ஒன்று அமைப்பதற்கு 'துப்புறவு' நடத்தி உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாநிலப் பிரதம என்ஜினியர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

வேறு எந்தத் திட்டம் பாதிக்கப்பட்டாலும், கவலை கொள்ளாது, உடனடியாகக் கோதாவரி மீது பாலம் அமைக்க ஆந்திர அரசு முடிவு செய்துள்ளதாம்.

இதற்காக ரூ. 70 இலட்சம் செலவிடவும் ஆட்சியினர் தயாராக இருப்பதாகத் தெரியவருகிறது.

இருந்ததை இழந்துவிட்டால் எரிச்சல் ஏற்படுவது இயற்கையே!

உண்மை நிலையை உணர்ந்து திருந்தும் காலம் வெகு விரைவிலேயே வருகிறது

கம்யூனிஸ்டுகளின் நிலைபற்றி அண்ணா கருத்துரை

"கம்யூனிஸ்டுகளின் தாறுமாறான பிரச்சாரத்திற்கு தி. மு. கழகத் தோழர்கள் பதிலளிப்பதோ, எழுதுவதோ தேவையில்லை.

"கம்யூனிஸ்டுகள் நம்மை வசைபாடுவதற்குக் காரணம் அவர்கள்—இருந்ததை இழந்தவர்கள்; நாமோ—இல்லாததை அடைந்தவர்கள்; எனவே, நம்மீது அவர்களுக்கு எரிச்சல் இருக்கத்தான் செய்யும்.

"மாலங்கோவ் பிரதமராக இருந்தபோது சொன்னேன்—தி. மு. கழகம்தான் உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சி என்று! நம்முடைய கொள்கைக்கு விரைவிலேயே கம்யூனிஸ்டுகள் வர இருக்கிறார்கள்—கேரளத்தில் பதவி ஏற்றுக்கொண்ட காரணத்திலிருந்து!

"துவக்கத்திலேயே மத்திய சர்க்காரின் எதேச்சாதிகாரம் மாநில சர்க்காரின் நிர்வாகத்திலே குறுக்கிடுகிறது. நிலைமை நீடிக்க—நெருக்கடி முற்றி—அமைச்சர் பதவியைவிட்டு வெளியேறி—இந்திய அரசியல் சட்டத்தை அவர்கள் கொளுத்தத்தான் போகிறார்கள்.

"கம்யூனிஸ்டுகள் தப்புக் கணக்கு போட்டுப்போட்டு பின்னர் திருந்திக்கொள்வது அவர்களின் தலை சிறந்த கொள்கைகளிலே ஒன்றாக இருப்பதால் சீக்கிரத்தில் உண்மை நிலை உணர்ந்து திருந்தவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

—இவ்வாறு அண்ணா அவர்கள், பொன்மலையில், தி. மு. கழக எம்.எல்.ஏ., எம். பி.-க்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாக் கூட்டத்தில் கருத்துரை ஆற்றுகையில்குறிப்பிட்டுள்ளார்.

உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகிவிடுவாராம்!

கட்டாக், ஏப். 25—

பிரஜா - சோஷலிஸ்டுக் கட்சியின் சாதாரண உறுப்பினர் பதவியைக்கூட தான் துறக்கப் போவதாகவும், 'நிலக் கொடை' இயக்கத்தில் தீவிர பங்கு கொள்ளப்போவதே இதற்குக் காரணமென்றும் ஜெயப்பிரகாஷ் நாராயண் அறிவித்துள்ளார்.

நெய்வேலியில் நேரு!

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைத் தோண்டும் வேலையை மே 20-ந் தேதியன்று பண்டித நேரு துவக்கிவைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

★

'பிர்லா பணத்தில் காங்கிரஸ் வளர்ந்தது'

நன்றிமறவா பம்பாய் பாடீலின் பிர்லா புகழ்மாலை

"தொழில்துறையை, தனியார் துறை—பொதுத்துறை என அமைத்திருப்பது வெறும் 'செயற்கை' ஏற்பாடேயாகும். உயர்ந்தபட்ச பயன்விளைவதற்கான வகையில் இரண்டு துறையையும் இணைத்துவிட வேண்டும்"

என்று பாசன—விசை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பாடீல் அப்பாராட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த 40 ஆண்டுக் காலமாகப் பிர்லா குடும்பமானது காங்கிரசுக் கட்சிக்கு ஊன்றுகோலாக இருந்துவந்திருக்கிறது. தேசிய இயக்கத்திற்குப் பிர்லா, வாரி வழங்கி இருக்கிறார். இந்திய சேவையில் ஈடுபாடுடைய இக்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 26—4—57 வெள்ளி

உத்திரப் பிரதேசத்தார் உள்ளக்கிடக்கை!

[2]

"தங்களுக்குத் தேவையான பயன்படு பொருட்கள் அனைத்தையும் விவசாயத்தின் மூலம் மட்டுமே மக்களால் அடைய முடியாது. ஏற்றுமதி எதுவும் செய்யாது இறக்குமதி மட்டுமே செய்துகொண்டு வருமானல், வெறும் விவசாயத்தை மட்டுமே நம்பிவாழ்ந்து வரும் வட்டாரமாக உத்திரப் பிரதேசம் என்றென்றும் பின் தங்கிக்கிடக்க வேண்டியது தான். உத்திரப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டுமானல், துணைத் தொழில்களை நிறுவுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய கனரகத் தொழில்களை நிர்மாணித்தாக வேண்டும்."

* * *

அம்மாநிலத்தில் குறிப்பிடத் தகுந்த தொழில் வளம் இல்லாதது போலவும், விவசாயத்தை மட்டுமே நம்பி அங்குள்ள மக்கள் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டு இருப்பது போலவும், அப்பகுதியின் பொருளாதார நிலை மேலும் மேலும் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பே பெற்றில்லாது தேங்கிக் கிடப்பதுபோலவும், குடிமக்களுக்கு இன்றியமையாத தேவையாக உள்ள பயன்படு பொருட்கள் அனைத்தையும் பிற மாநிலங்களிலிருந்தே இறக்குமதி செய்து கொண்டு வருவது போலவும், உ. பி. முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணனந்தர், கோவெனக் கதறி இருக்கின்ருர்.

கேட்ட கனரகத் தொழில்களைத் துவங்க இந்தியப் பேரசு மறுத்துவிட்டதே, அதன் தொடர்பில் துணைத் தொழில்கள் பல துவங்கப்படும் வாய்ப்பும் கெட்டழிந்துவிட்டதே எனவும், அந்த முதலமைச்சர் அங்கலாய்த்துக்கொண்டு இருக்கின்ருர்.

அம்மாநிலத்தில் விவசாய வளம் நிரம்ப உண்டு. அதைவிடத் தொழில் வளமும் கூடுதலாக உண்டு.

அப்பகுதியில் பாய்ந்தோடும் கங்கை உயர் நதியை பயன்படுத்திக்கொண்டு, விவசாயம் அங்கு ஓங்கி வளர்ந்து வருகிறது.

உணவுப் பொருள் உற்பத்தியில், அப்பகுதி தன்னிறைவை அடைந்து விட்டிருக்கின்றது.

பிறமாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் அங்கு கோதுமை விளைகிறது.

உத்திரப்பிரதேசத்தில் கூடுதலான வயல்களில், 'பணப்பயிர்' என்ற காரணப் பெயர் பட்டியில் இடம் பெற்றுள்ள கரும்பு சாகுபடி ஏராளமாகச் செய்யப்பட்டு வருகிறது.

பருத்திப் பயிர் செய்யப்படுகிறது—பற்பல தானியங்கள் பயிர்செய்யப்பட்டு வருகின்றன.

மற்ற மாநிலங்களில் உற்பத்திச் செய்யப்படாத ஒரு பொருள் அங்கு உற்பத்திச் செய்யப்பட்டு வருகின்றது. அது தான் போதைதரும் பொருளான அபின். இந்தியத் துணைக்கண்டம் முழுவதுக்கும் உத்திரப்பிரதேசந்தான் அபின் விற்று வருகிறது.

புகையிலை அங்கு உற்பத்திச் செய்யப்பட்டு வருகிறதை குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

மேலே குறிப்பிட்டுள்ளவை, உ. பி. விவசாயத்தின் ஒரு சிறு கூறேயாகும்.

இமயமலைச் சாரலில் ஏராளமாகக் கிடைக்கப்பெறும் காட்டு வளத்திற்கு, உத்திரப்பிரதேசந் தான் கர்த்தா.

உ. பி. மாநிலத்தின் விவசாய வளம் குறைவாக மதிப்பிடத் தக்கதல்ல என்ற உண்மையை நிலைநாட்ட, மேலே தரப்பட்டிருக்கும் சிறுவிளக்கமே போதுமானதாகும்.

விவசாயத்தின் தனிச் சிறப்புக்குக் சிறிதளவும் குறைந்தில்லாத அளவில், பயன்படுபொருட்களை உற்பத்திச் செய்வதிலும், உத்திரப் பிரதேசம் முன்னணியில் இருந்து வருகிறது. அங்குள்ள தொழில் வளம் அதை மெய்ப்பிக்கும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உற்பத்தியாகும் மொத்த ஆலை சர்க்கரையில் அறுபது சதவிகிதத்தை உத்திரப் பிரதேசம் உற்பத்திச் செய்து வருகிறது. அவ்வளவு சர்க்கரையையும் உற்பத்திச் செய்ய, அங்கு மற்றெங்கும் இல்லாத எண்ணிக்கையில் சர்க்கரை ஆலைகள் பெருத்துக் கிடக்கின்றன.

அங்கு உற்பத்திச் செய்யப்படும் அறுபது சதவிகித சர்க்கரை முழுவதையும், உத்திரப் பிரதேச மக்கள் உண்டுவிடுவது கிடையாது. பிற மாகாணங்களுக்கு, அதில் பெரும் பகுதி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அறுபது சதவிகித சர்க்கரையை உற்பத்தி செய்யக்கூடிய பல ஆலைகளை நிர்மாணித்துக்கொண்டிருக்கின்ற நிலையில்தான், விவசாயப் பகுதியாகக் கிடக்கிறதே, கனரகத் தொழிலைத் துவங்க தடை போடப்படுகிறதே என்று வயிற்றிலும்வாயிலும் அறைந்து கொண்டு, குய்யோமுறையோ எனக் குந்தி அழக் கிளம்புகிருர் உத்திரப் பிரதேச முதலமைச்சர் சம்பூர்ணனந்தர்!

ஏராளமான சர்க்கரை ஆலைகளைப் பெற்றிருப்பதுடன் மட்டுமே அம்மாநிலத்தின் தொழில் வளம் முற்றுப்பெற்று விடவில்லை. மற்ற ஒரு பெரும் ஆலைத் துறையும் அங்கு சிறப்புற விளங்கிவருகிறது.

நெசவாலைகளுக்கு பெயர் பெற்று விளங்குவது பம்பாய், அகமதாபாத் ஆகிய இரு நகரங்களும் ஆகும். அத்துறையில் அவ்விரு நகரங்களுடனும் போட்டியிடுகின்ற வகையில், உத்திரப்பிரதேசம் நெசவாலைகளைக் கொண்டிருக்கின்றது.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஆலைநெசவுத் தொழில் பற்றி நினைக்கும்பொழுதே, பம்பாய், அகமதாபாத், கான்பூர் என்ற மூன்று தொழில் நகரங்களின் பெயர்கள்தான் எவருக்கும் கருத்தில் தோன்றும். அந்த கான்பூர், உத்திரப்பிரதேசத்தின் தொழில் கேந்திரமாகும்.

அங்கு காகிதத் தொழிற்சாலையும் உண்டு; கனரசாயனத் தொழிற்சாலையும் உண்டு.

நமது பட்டிதொட்டிகளிலும் ஆர்வத்துடன் கேட்டுப் பெறப்படும் கான்பூர் பாதரட்சை, உத்திரப் பிரதேசத்தின் இறக்குமதி பொருளேயாகும். அதற்கான பெரும் தொழிற்சாலை உ. பி. - யில் இயங்கிவருகிறது.

அங்கே கம்பளி ஆலைகள் உண்டு; செயற்கை பட்டுத் தொழிற்சாலைகளும் உண்டு!

தென்னட்டில் இயற்கை ரப்பர் உற்பத்தியைப் பெருக்க காடு கரம்பும், ஏராளமான மக்களும் இருந்துங்கூட, செயற்கை இரப்பர் உற்பத்திச் செய்வதற்கான தொழிற்சாலையைப் பெறுகின்ற பெரும் பேறு உத்திரப் பிரதேசத்திற்குத்தான் இருந்திருக்கின்றது.

வேறு மாநிலங்கள் பெற்றில்லாத அளவு உத்திரப் பிரதேசம் புகைவண்டி போக்குவரத்து வசதியைப் பெற்றிருக்கிறது. மற்ற மாநிலங்களைவிட, அதிகமான கல் தொலைவுள்ள இருப்புப் பாதை அங்குதான் அமைக்கப் பெற்றிருக்கிறது என்பது கருதத்தக்கது.

விவசாயப் பெருவளத்திலும், நவீனத் தொழில் வளத்திலும் தென்னட்டைவிட—வடநாட்டில் உள்ள சில மாநிலங்களையும்விட முன்னணியில் இருந்துவரும் உத்திரப்பிரதேசம், தொழில்வளம் இழந்திருப்பதாகவும், பொருளதாரத் துறையில் 'பிற்போக்கு' நிலையில் இருந்துவருவதாகவும், அதன் முதலமைச்சர் சம்பூர்ணனந்தரால் சித்தரிக்கப்படுகிறது. தீர்ப்பு அளிக்கும் பொறுப்பு உங்களுடையது.

பகட்டாகக் காட்சி தராதீர்- ஆடம்பரமாக உலவாதீர்!

தனிப் புகைவண்டியில் செல்லாதீர்--பாதுகாப்பினர் புடைசூழப் பிரயாணம் செய்யாதீர்!

அதிகாரத்தைக் காட்டிக் கொள்ளாதீர்---எசமானர் எரிச்சலடைவர்!

சகாக்களை எச்சரிக்கின்ருர் பிரதமர் நேரு

புதுடில்லி, ஏப். 24—

ஆடம்பரத்திற்கும் பகட்டிற்கும் எதிராக மேற்கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கையாக தேசீயக் கொடியைத் தங்கள் கார் முகப்பில் பறக்கவிடக்கூடாது என, கூட்டு அமைச்சர்களைப் பிரதமர் நேரு எச்சரித்துள்ளார்.

வெளிப்பகட்டிற்கும் ஆடம்பரத்திற்கும் எதிராக மந்திய ஆட்சியினர் கருத்தோட்டத்தை மாநில முதலமைச்சர்களுக்கும் உணர்த்தி இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

தொகுதி வாக்காளர்களிடமும் மக்களிடமும் தொடர்பு வைத்துக் கொள்ளும் கடமை உணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமே அல்லாது தம்மிடமுள்ள அதிகார அந்தஸ்தைக் காட்டிக்கொள்ளும் நோக்குடன் தாங்கள் செயலாற்றக்கூடாது என அறிவிக்கப்பட்டிருக்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

"எசமானர்களான பொதுமக்களுக்கு எரிச்சலூட்டக் கூடிய—தங்கள் அதிகார நிலையை வெளிக்காட்டக்கூடிய எந்த ஒரு வினையையும் அமைச்சர்கள் மேற்கொள்ளக்கூடாது; சிறப்பான நேரங்களிலும், கடமையாற்றும் காலங்களிலும் நீங்கலாக, மற்ற சொந்தப் பிரயாண நேரங்களில் தேசியக் கொடியை அமைச்சர்கள் கையாளக்கூடாது" என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அவசியமான கடமையை நிறைவேற்றுவதற்காக அல்லாது, பொதுவாகத் தனிப் புகைவண்டிகளில் பிரயாணஞ் செய்வதை அமைச்சர்கள் தவிர்க்க வேண்டும் என்றும், அக்காலங்களில் தங்களுடைய அதிகாரத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையில் மேற்படி புகைவண்டிகளின் வெளியில் பாதுகாப்புப் படையினரை அமர்த்தக்கூடாது என்றும் பிரதமர் அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

பொதுமக்களை இலகுவாக எரிசசல் கொள்ளச் செய்யக்கூடிய வகையில் உடனழைத்துச் செல்லப்படும் தனது பரிவாரங்களில் விசேட உடை அணிந்துள்ள கோலத்தில் 'பியூன்'களை அமைச்சர்கள் அழைத்துச் செல்லக்கூடாது என்றும் பிரதமர் எச்சரித்திருப்பதாகத் தெரிகிறது.

ரிசர்வ் பாங்கியின் எச்சரிக்கை

சிலர், நிறுவனத்தின் 'பங்கு'களைப் பாங்கிகளில் ஈடுகாட்டி வர்த்தக சூதாட்டத்திற்குப் பயன்படுத்துவதாகவும், இனி அவர்களுக்குக் கடன் தரும் விஷயத்தில் பாங்கிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் ரிசர்வ் பாங்கி, அறிவித்துள்ளதாம்!

குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்குப் பதிவு

வெளியான செய்திக்குக் காஷ்மீர் தேர்தல் ஆணையாளர் மறுப்பு

ஜம்மு, ஏப். 23—

இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் பங்குகொள்ள மாநில சட்டசபை மே 6-ந் தேதி ஸ்ரீநகரில் கூடுகிறது என்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளசெய்தியை தேர்தல் ஆணையாளர் ஈரானந்த் ரெய்ரா மறுத்துள்ளார்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் பங்குகொள்ள ஸ்ரீநகரில் சட்டசபைக் கூட்டம் கூட்டப்படவில்லை என்று அவர் திட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஜம்மு—காஷ்மீர் பகுதியில், தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு மே 6-ந்தேதி ஸ்ரீநகரில் நடைபெறுமென்றும், அதில் பங்கு கொண்டு வாக்களிக்க விரும்புவோர் ஆவன செய்யலாம் என்று மட்டுமே உறுப்பினர்களுக்கு இதுவரையில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர்.

உள்ளாட்சிக் கழகங்களின் மந்தப் போக்கு!

சென்னை அரசாங்கம் சுட்டிக் காட்டுகிறது

சென்னை, ஏப். 24—

ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் யாவும் திறம்பட வேலை செய்யவில்லை என்பதை சென்னை அரசாங்கம் காணத் துவங்கிவிட்டது.

இந்த நிறுவனங்கள் எதிர்பார்த்தவாறு செயல்படவில்லை என்றும், இவைகளின் முன்னேற்றம் மிகவும் மோசமாக உள்ளது என்றும் சென்னை அரசாங்கம் கருதுகிறதாம்!

பொதுவாக, நகரமைப்புத் திட்டங்களைத் தயாரிப்பதில் அவைகள் அக்கறையே எடுத்துக் கொள்ளவில்லையாம்!

காலதாமதமின்றி இந்தத் துறையில் உடனடியாக ஆவன செய்யவேண்டும் என்று சென்னை அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

1954-55.ம் ஆண்டின் நகரசபை—ஊராட்சி மன்ற அறிக்கையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

முதல் ஆண்டில் ரூ. 85- இலட்சம் செலவாம்!

சென்னைத் துறைமுக அபிவிருத்தி பற்றித் தகவல்கள்

சென்னை, ஏப். 24—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் முதல் ஆண்டில் சுமார் ரூ. 85 இலட்சம் செலவிட்டு சென்னைத் துறைமுகத்தை முன்னேற்றமடையச் செய்துள்ளனராம்.

1958-ல் பிரயாணிகள் நிலையம் கட்டி முடிக்கப்படுமாம்.

சரக்குப் பொருள், நிலக்கரிப் பொருள் நிலையங்களும் கட்டப்பட்டுவருகிறதாம்.

தண்ணீர் துறை நுழைவுப் பகுதியின் கட்டிட வேலையும் முடிந்துவிடுமாம்.

துறைமுக ஊழியர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றனவாம்.

புதிதாக மூன்று 'கிரேன்கள்' வாங்கப்பட்டுள்ளதாம்.

பிலாய் உருக்குத் தொழிற்சாலை

டி. டி. கிருஷ்ணமாச்சாரி காட்டும் அக்கரை

நாகபுரி, ஏப். 25—

இந்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்று பிலாய் உருக்குத் தொழிற்சாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

ரூ. 15 கோடி செலவிடப்படும் மூன்று உலைக் கூடங்களில் முதல் உலை ஜூன் மாதத்திலும், மற்ற இரண்டும் அக்டோபர் திங்களுக்குள்ளாகவும் தயாராகிவிடுமாம்.

மேலும், 'தெர்மல்' நிலையங்கள் அமைக்கப்பட இருக்கும் இடத்தையும் அவர் பார்வையிட்டு, குடியிருப்பு நகர் திட்டத்தின் மொத்தச் செலவான ரூ. 14 கோடி விவரங்களையும் ஆராய்ந்து, ரூர்கேலா உருக்குத் தொழிச்சாலையைப் பார்வையிடச் சென்ருராம்.

நாம் பெற்ற இடங்கள் நேர்மையின் சின்னங்கள்

புனுகு பூனையைப்போல் கழகத் தோழர்கள் நடைபோடமாட்டார்கள்!

வாழையடி வாழையாகக் கன்றுகள் பல தோன்றுவதுபோல் கழகங்கள் பிறக்கின்றன

தோழியர் சத்தியவாணிமுத்து நல்லுரை

18—4—57 மாலை குடந்தை வட்டம் - அணக்கரையை அடுத்துள்ள செருகடம்பூரில், தி. மு. கழகக் கிளைத் துவக்க விழாவும், தோழியர் சத்தியவாணி முத்து அவர்களுக்குப் பாராட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. திரளான மக்கள் குழுமியிருந்தனர்.

தோழர் எஸ்.கே. இராசாமணி தலைமையில் தோழர்கள் காளிதாஸ், ம. கோ. மணி முதலானோர் சொற்பொழிவாற்றினர்.

பின்னர், தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் நல்லுரை வழங்கினர். அவரது சொற்பொழிவின் சுருக்கம் பின்வருமாறு:—

"தேர்தலில், அதிகமாக எண்ணிக்கையில் காங்கிரஸ் வெற்றி பெற்றது; நாம் பதினைந்து இடங்களில் வெற்றி பெற்றோம். எண்ணிக்கையில் குறைவுதான்; ஆனால் நாம் பெற்ற செல்வாக்கு அதிகம். குறிப்பாக இந்த ஆடுதுறைத் தொகுதி தோல்வி தந்த தொகுதி; எனினும் இங்கே ஒரு புதுக் கிளை துவங்குகிறது-வாழை இறந்தாலும், வாழையடி வாழையாக, கன்றுகள் பல தோன்றுவதுபோல! தோற்றுப்போன சில காங்கிரஸ் தோழர்கள் புனுகு பூனை நடை போடுவதைப் போல இல்லாமல், நமது தோழர்கள் உற்சாகமாக காணப்படுகிறார்கள்! ஆங்காங்கே புதுப் புதுக் கிளைகள் துவங்குகின்றன!

"தேர்தல் மிகப் பயங்கரமானது. நாம் தேர்தலுக்குப் புதியவர்களாக-அனுபவம் குறைந்தவர்களாகத் தேர்தலில் பல இடங்களில் போட்டியிட்டோம்; பதினைந்தே இடங்களைப் பெற்றோம். ஆனாலும், நாம் காங்கிரசுக்கு அடுத்த நிலையில் 100-க்கு 14 சதவிகிதம் ஓட்டுக்களையும், பதினேழு இலட்சம் ஆதரவாளர்களையும் பெற்றோம்.

"தேர்தலுக்கு முன், 100-க்கு 3 சத விகிதம்—பின்பு 6 சத விகிதம் வாக்குகள் மட்டும் கிடைக்கும் என்று நமக்கு சோதிடம் கணித்தவர்கள், கிடைத்த 14 சத விகிதம் கண்டு இன்று வாய்மூடிக் கிடக்கிறார்கள்.

"காங்கிரசார் பணம் கொடுத்து பெற்ற ஓட்டுக்கள் ஏராளம்! மேடைகளிலே சொன்ன பொய்கள் பலப்பல! ஆகவே, பெற்ற இடங்களும் அதிகம். ஆனால் நாம் பெற்ற இடங்கள் நேர்மையின் சின்னங்கள்! நமக்குக் கிடைத்த செல்வாக்கும் ஆதரவும் அதிகம்.

"நமது செல்வாக்கையும் ஆதரவையும் அறிந்தோ என்னவோ சட்டசபை கூடுமிடத்தைக் கோட்டைக்கு மாற்றியிருக்கிறார்கள். ஆனால் பாதாளத்துக்குப் போனாலும் மக்களை அவர்கள் ஏமாற்றமுடியாது.

"அவர்கள் நல்லதைச் செய்தால் நாங்கள் வரவேற்போம்; துணைபுரிவோம். பொல்லாததைச் செய்தால் தட்டிக்கேட்போம்.

"நீங்கள் ஒவ்வொருவரும் குடும்பம் குடும்பமாக கழகத்தில் சேர்ந்து, கழகத்தை ஒரு பெருங் குடும்பமாக்குங்கள்; சட்டசபைக்குச் செல்லும் எங்களுக்கு உற்சாகம் தாருங்கள்."

பிறகு தோழர் பொ, தருமன் அவர்கள், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு பாராட்டுரை வழங்கினார். ம.கோ. மணி நன்றி நவின்றார்.

அன்று இரவு 10-மணியளவில் குடந்தை வட்ட தி. மு. க. சார்பில் உழவர் முன்னேற்ற சங்கம் தோழர் ம. கோ. மணி அவர்களை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டது.

நெய்வேலி சுரங்கத் திட்டப் பகுதியில் பாதிக்கப்படும் மக்களுக்கு வேண்டுகோள்

"தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக 76 கிராமவாசிகளாகிய நாம், நம்முடைய கிராமங்களையும், பயிரிடும் நிலங்களையும், தோட்டங்களையும், பலன்தரும் மரங்களையும், தோப்புகளையும் சுரங்கத் திட்டத்திற்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், பொதுவாக பாதிக்கப்படும் அனைவருக்கும் வாழ்க்கை உத்தரவாதம் கிடைக்கவேண்டும்.

"அதற்காக, 14—4—57 காலை 10 மணிக்கு நெய்வேலி 'சர்க்யூட் ஹவுசில்' சென்னை சட்டமன்ற உறுப்பினர்களான தோழர்கள் எம். செல்வராஜ், வேதமாணிக்கம், எம். கல்யாணசுந்தரம் ஆகியோரும் மற்றும் நெய்வேலித் திட்டத்தால் பாதிக்கப்படும் வியாபாரிகள்—விவசாயிகள் அனைவரும் கூடி கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்துள்ளார்கள்:—

1. உடனடியாக, பாதிக்கப்படுவோர் சங்கத்தை அமைப்பது; 2. 28-4-57ல் கிராமப் பிரதிநிதிகளைக் கூட்டி, சங்கத்திற்கு நிரந்தரப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது; 3. சுரங்க திட்டத்தால் பாதிக்கப்படும் மக்களைக் கொண்ட மாநாடு நடத்துவது; 4. 28-4-57 மாலை ஒரு பொதுக்கூட்டம் நடத்துவது.

"ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களும், வியாபாரிகளும் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒன்றுபடுமாறும், மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளுகிறேன்"

என்று, அலுவல்களை நடத்துவதற்குஅமைக்கப்பட்ட 'ஆர்கனைசிங் கமிட்டி'யார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கேரளப் பகுதி தி. மு. க. தோழர்கட்கு

வேண்டுகோள்

"கேரளத்தில் தி. மு. கழகக் கேரளப் பிரதேசக் குழு அமைப்பு விழா, மே 5-ல் நடைபெறவிருக்கிறது;

"மே 5—கேரளத்தில், தி. மு. கழக வரலாற்றில், வளர்ச்சிப் பாதையின் ஒரு திருப்பு முனையாக இருக்கும்.

"மே 5-ல் உலகத் தொழிலாளர்கள் விடுதலை கீதம் பாடினர்! அதே நாளில் திராவிடத்தின் சுதந்திரத்திற்காகக் கேரள மக்களும் ஒன்று திரண்டு நமது இலட்சிய கீதத்தை முழக்க இருக்கிறோம்.

"இந்த விழாவைச் சிறப்பிக்க, கேரளத்தில் உள்ள ஒவ்வொரு கிளைக் கழகங்களும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சின்னாட்களுக்கு முன்பு, ஒவ்வொரு கிளைக் கழகத்தோடும் நேரில் தொடர்புகொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டதால், அவைகளின் பொருளாதார வசதியைக் குறித்து தெரிந்துகொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. எனவே, அதன் அடிப்படையில்தான் இந்த அமைப்பு விழாவிற்கான திட்டங்களை வகுத்துள்ளேன்.

"எல்லாப் பிரதிநிதிகளும், தோழர்களும் விழாவின் முன்னாள் இரவே, பாலக்காட்டில் நமது கிளையில் வந்து சேர்ந்திருக்க வேண்டும்.

"விழாவில் பங்கு கொள்ள வந்துசேரும் வெளியூர் தோழர்களுக்கு தங்குவதற்கான இடம், பொதுக் கூட்டத்திற்கான செலவு ஆகியவைகள், பாலக்காட்டுக் கிளையின் பொறுப்பாகவே இருக்கும்.

"பொறுப்பு பெரிதாயினும் கட்சியின் நலன்பேணும் பாலக்காட்டுக் கிளையினர் அதனைப் பொருட்படுத்தாது செயலாற்றுவர் என நம்புகிறேன்.

"விழாவன்று நடைபெறும் கேரளப் பிரதேசக் கமிட்டிக் கூட்டத்தில் கொண்டுவர வேண்டிய தீர்மானங்களை, ஒவ்வொரு கிளைகளும், செயற்குழுவோ, பொது உறுப்பினர் குழுவோ கூடி தயார் செய்து மே 3-ந் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

"விழாவின் வெற்றிக்காக ஒவ்வொரு தோழர்களும் தங்களால் இயன்ற ஒத்துழைப்பை நல்கி உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என்று, தி. மு. கழகக் கேரளப் பிரதேசக் குழு கன்வீனர் தோழர் கே. எம். ஜாபேர் அறிவிக்கிறார்.

கேளுங்கள் - கொடுக்கப்படும்; தட்டுங்கள்--திறக்கப்படும்

'மூதறிஞர்' முதுமொழியைப் பின்பற்ற ஊழியர்களுக்கு வேண்டுகோள்

அ. இ. ஆர். எம். எஸ். ஊழியர்கள் 'சங்க--சென்னை அஞ்சல் பிரிவுக் கிளையின் ஆண்டு விழாவில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

21-4-57 மாலை 5 மணிக்கு மேற்படி சங்க ஆண்டு விழாவும், 'சீசன் டிக்கட்' வெற்றி விழாவும், அஞ்சல் பிரிப்பக அலுவலகத்தில் தோழர் மா. இராமலிங்கம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஏ. எம். ஏ. மஜீத் விழாவைத் துவக்கி வைத்தும், தோழர் இரா. சக்கரவர்த்தி அனைவரையும் வரவேற்றும் சொற்பொழிவாற்றினர்.

விழாவில் கலந்துகொண்ட பொதுச்செயலாளர் இரா. செழியன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில், அஞ்சல் ஊழியர்கள் பொதுமக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றியும், அரசியலாருக்குத் தங்கள் குறைகளைத் தெரிவிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் விளக்கிக் கூறியபின், 'சீசன் டிக்கட்' பிரச்சினையைப் பற்றி குறிப்பிடுகையில், 'கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்,' என்று இயேசு சொன்ன மொழியை கவனப்படுத்தி, அதே முறையில் ஊழியர்கள் கடந்த ஒரு ஆண்டு காலமாக நடத்தியக் கிளர்ச்சியின் பயனாக வெற்றி பெற்றார்கள் எனக் கூறினார்.

இறுதியாக அரசாங்கம் சமீபத்தில் கொண்டுவந்த நாணய மாற்று முறைப்படி அஞ்சல் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படவில்லை என்பதை விளக்கிப் பேசி அஞ்சல் அட்டைகளிலும், பணமனுப்பும் மனுக்களிலும் மாவட்ட மொழிகளை அச்சடிக்கவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார்.

இவ்விழாவில், பாராளுமன்ற உறுப்பினர் மீர் தாவுத்அலிமிர்சா, ஜோசப் தம்பிராஜ், பர்மன் முதலியோர் கலந்துகொண்டனர்.

தோழர் மீர் ஹாடி அலி கிர்மானி நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

வயதானவர்களுக்கு வேலை நீடிப்பு

மைசூர் அரசாங்கத்தின் முடிவு?

பெங்களூர், ஏப். 25—

"பொது மக்களுடைய நன்மைக்கு என்று கருதப்படாதவரையில், 'பென்ஷன்' பெறவேண்டிய வயதை அடைந்துவிட்ட அதிகாரிகளின் பதவி காலத்தை நீடிக்கக் கூடாது" என்று மைசூர் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

மீண்டும் பதவியில் அமர்த்தப்படவேண்டியவர்கள் என்று கருதப்படும்போது, முதலில் அவர்களுக்குப் 'பென்ஷன்' கொடுத்துவிட்டு, பின்னர்தான் மீண்டும் அவர்களுக்கு வேலை கொடுப்பது பற்றி முடிவு செய்ய வேண்டுமாம்!

பொதுமக்கள் கட்டிய பொதுநல நிறுவனங்கள்

சேலம் கலெக்டர் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது

சேலம், ஏப். 23—

சுக்கம்பட்டிகிராமத்தில் பொது மக்களால் சுமார் ரூ. 14,000 - செலவில் கட்டப்பட்ட பாலர் பள்ளி, முதியோர் கல்வி, பிரசவ விடுதி ஆகிய புதுக் கட்டிடங்களை 23-ந் தேதி மாலை சென்னை மாநில சமூக நல அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டியின் தலைவர் தோழியர் எஸ். அம்புஜம்மாள் திறந்துவைத்தார்.

தோழியர் ஆர். சீதாலட்சுமி எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். இந்த விழாவிற்கு சேலம் ஜில்லா கலெக்டர் எம். ஜி. பால சுப்பிரமணியம் தலைமை வகித்தார். (ந. தி.)

'நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு சட்டமன்றத்தில் பணியாற்றுவோம்'

வளவனூரில் சட்டமன்ற உறுப்பினர்கள்

தென்னாற்காடு மாவட்டம் வளவனூர் ஊராட்சி மன்றத்தார் 22—4—57 மாலை 6 மணிக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் திரு. முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் அண்ணா அவர்களுக்கும் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கும் ஊராட்சி மன்றச் சார்பில் வரவேற்பு மடல்கள் வாசித்துக் கொடுத்து, மலர் மாலை அணிவித்தார்.

அண்ணா அவர்களும், தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களும் தங்கட்கு அளித்த வரவேற்பு மடல்கட்கு நன்றிகூறிக்கொண்டு, சட்டசபையில் தங்களால் முடிந்தவரை நாட்டு மக்கள் முன்னேற்றம் கருதி பணியாற்றுவோம் என்று குறிப்பிட்டனர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் விழா முடிவுற்றது.

பாராட்டுக் கூட்டம்

அன்று இரவு 7 மணிக்கு வளவனூர் தி. மு. கழகச் சார்பில் தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கட்கும், டில்லிப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் பாராட்டு விழா தோழர் கே. பரசுராமன் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் நித்தியானந்தம் திராவிடப் பண் பாடினார்.

பிறகு தோழர்கள் மகாதேவன், கிருஷ்ணமூர்த்தி வாழ்த்துரை வழங்கினர்.

பல மன்றங்கள் சார்பில் மலர் மாலைகளும், வாழ்த்துமடலும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டது.

தோழர்கள் எம். செல்வராஜ், சி. நடராசன், எம். ஆனந்தன், ஏ. கோவிந்தசாமி, சண்முகம், அ. பொன்னம்பலனார், அண்ணா ஆகியவர்கள் தேர்தலில் வாக்களித்த நண்பர்கட்கும், ஒத்துழைப்பு தந்த கழகத் தோழர்கட்கும் நன்றி கூறிக்கொண்டு, தி. மு. கழகத்தின் எதிர்கால ஆக்கவேலைகள் குறித்தும், சட்டசபையில் ஜனநாயகத்தையும், தி. மு. கழகத்தின் இலட்சியத்தையும் மறவாமல் பணியாற்றுவோம் என்றும், பொதுமக்கள் தி. மு. கழகக் கொள்கைகள் நாட்டில் பரவ கழகங்கள் நிறுவியும், எங்கும் கழகக் கொடிகள் பறக்கவும், கழக ஏடுகளை மக்கள் வாங்கிப் படித்தும் துணைபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலலுடன் கூட்டம் முடிவுற்றது.

இவ்வூர் பொதுமக்கள் சார்பில் அன்று மாலை தேநீர் விருந்தும்—இரவு விருந்தும் அண்ணா அவர்கட்கும் சட்டசபை உறுப்பினர்கட்கும், பாராளு மன்ற உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட்டது.

பெயர் சூட்டல்

வளவனூர் தோழர் இராமசாமி அவர்கள் ஆண் மகவுக்கு, அண்ணா அவர்கள் 'பாண்டியன்' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது. மற்றும் அண்ணா அவர்களிடம் தரப்பட்ட 101 காலணாக்களும் 'நம் நாடு' வளர்ச்சிக்கு உதவப் பெற்றது.

கேரளத்தில் தமிழ் கற்றுத் தரப்படும்?

அமைச்சர் தரும் விளக்கம்

கள்ளிக்கோட்டை, ஏப். 25—

"கேரள மாநிலப் பள்ளிகளில் மாணவர்களுக்குத் தமிழ் மொழி கற்றுத்தர வசதி செய்து தரப்படுமா?" என்று, கல்வி அமைச்சரைக் கேட்கப்பட்டபோது, 'போதுமான மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட மொழியைக் கற்பதற்கு முன்வந்தால் அவசியம் வசதி செய்துதரப்படும்' என்று அமைச்சர் பதிலளித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் யார்?

சேலம், ஏப். 23—

தமிழ்நாடு காங்கிரசின் பேரவைக் கூட்டம் மே 11, 12-ம் நாட்களில் சேலம் மாவட்ட—ஏற்காட்டில் நடைபெறும். அப்பொழுது தமிழ்நாடு காங்கிரசுக்குத் தலைவரும், காரியதரிசியும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். (ந. தி.)

அமைச்சர் கூறியது பொய்யா?

திருச்சி மாவட்ட நிர்வாக அலுவல்கள் தமிழில் நடைபெறவில்லையாம்!

அதற்கான காரணம் பற்றி கலெக்டர் தரும் தகவல்

திருச்சி, ஏப். 25—

திருச்சி மாவட்ட நிர்வாக அலுவல்கள் தமிழிலேயே நடத்தப்படுகிறது என்று சென்னை அரசாங்கம் பெருமையுடன் கூறியது பொய்த்துவிட்டது.

எப்போதும்போல இப்போதும் மாவட்ட நிர்வாகம் ஆங்கிலத்திலேயேதான் நடத்தப்பட்டுவருகிறதாம்.

"போதிய தமிழ் எழுத்துப் பொறி இயந்திரமும், சுருக்கெழுத்தாளர்களும் கிடைக்காததே இதற்குக் காரணம்' என்று, திருச்சி கலெக்டர் கூறியுள்ளார்.

அம்மை நோய் பரவிய பிரதேசங்கள்

திருச்சி, சீரங்கம் நிலைமை

திருச்சி, ஏப். 25—

திருச்சி நகரத்திலும், சீரங்கத்திலும் காலரா நோய் பரவியுள்ளதாம்.

273 பேர்களுக்கு அம்மை நோய் ஏற்பட்டதில் 100 பேர் இறந்துவிட்டனர் என்றும், மாவட்டத்தில் மற்ற இடங்களில் மொத்தம் 299 பேர் இப்பிணியால் பிடிக்கப்பட்டனர் என்றும், அவர்களில் 88 பேர் இறந்துவிட்டனர் என்றும் திருச்சி மாவட்டக் கலெக்டர் அறிவித்துள்ளார்.

திருச்சியும், சீரங்கமும் காலரா பரவிய பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

உள்ளாட்சி - ஊராட்சி மன்றங்கள் சீரமைப்பு

புதிய அடிப்படையில்: பரிசீலனை செய்ய குழு நியமனம்

சென்னை, ஏப். 25—

சென்னை நகரசபை உள்பட எல்லா உள்ளாட்சி—ஊராட்சி—நகராட்சி மன்றங்களையும் சீர்திருத்துவது பற்றிய பிரச்சினையைப் பரிசீலனை செய்ய மந்திரிசபை துணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகம், நிதி நிலைமை பல்வேறு கட்டங்களில் இருக்க வேண்டிய அதிகாரம், தற்போதைய சட்டத்திற்குச் செய்ய வேண்டிய திருத்தங்கள் உள்பட எல்லாப் பிரச்சினைகளையும் இக்குழு பரிசீலனை செய்யும்.

சென்னை அமைச்சர்களான சுப்பிரமணியம், பக்தவத்சலம், கக்கன், லூர்து அம்மாள் ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

கன்னியாகுமரி மாவட்ட எதிர்காலம்

சீர்திருத்தம்பற்றி ஆராயத் தனிக் குழு நியமனம்

சென்னை, ஏப். 25—

கன்னியாகுமரி மாவட்டத்தின் எதிர்காலம் பற்றிய பிரச்சினையைப் பரிசீலனை செய்ய காமராசர் தலைமையில் ஐவர்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் சுப்பிரமணியம், பக்தவத்சலம், மாணிக்கவேலர், வெங்கட்ராமன் ஆகியோர் குழுவின் மற்ற உறுப்பினர்களாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைத் தனி உறுப்பாக நீடிக்கச் செய்வதா, அல்லது வேறொரு மாவட்டத்துடன் இணைத்து தற்போதைய திருநெல்வேலி—இராமனுதபுரம்—திருச்சி மாவட்டங்களின் எல்லைகளைத் திருத்த வேண்டுமா என்பது பற்றி இக்குழு பரிசீலனை செய்யுமாம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய வர்த்தகம், தொழில் ஆகியவற்றின் அடையாளமாக அவர் இருந்துவருகிறார்"

என்று படேல், தொழிலதிபர் பிர்லாவிற்கும் காங்கிரசுக் கட்சிக்கும் உள்ள தொடர்பை விளக்கியுள்ளார்.

உறையூர் நெசவாளர் போராட்டம்

சங்கச் செயலாளர் உண்ணாவிரதம்

உறையூர், ஏப். 24—

திருச்சி—உறையூர் நெசவாளர்களின் கூலியை 'மாஸ்டர் வீவர்'கள் குறைத்துவிட்டதைக் கண்டித்து கடந்த 4 தினங்களாக மறியல் நடைபெற்றுவந்தது; அதற்கு நெசவு முதலாளிகள் பணியாததால் இன்று திருச்சி மாவட்ட திருவள்ளுவர் கைத்தறி பாவுத் தொழிலாளர் சங்கச் செயலாளர் தோழர் ஏ. எம். வி. முத்துசாமி காலை 11 மணி முதல் உண்ணாவிரதம் துவக்கியிருக்கிறார்.

கண்டனக் கூட்டம்

22—4—57 மாலை 6 மணிக்கு, திருச்சி உறையூர் நெசவுத் தொழிலாளர்களின் சார்பில் உறையூர் பஞ்சவர்ணசுவாமி கோயில் தெருவில், தோழர் எம். கே. எம். அப்துல்சலாம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ். மணி, எஸ். சுப்பரெத்தினம், டி. கே. ரெங்கசாமி, தனசாமி ஆகியோர் நெசவாளர்களின் கூலி குறைப்பைக் கண்டித்தும், வீட்டு வரி உயர்வைக் கண்டித்தும் பேசினர். தோழர் ஏ. எம். வி. முத்துசாமி நன்றி கூறினர். (ந. நி.)

புனர் வாழ்வுக்குப் புதிய திட்டமா?

இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட தமிழர்களுக்கு வாழ்வளிப்பா?

கோவை, ஏப். 24—

இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட தமிழர்களுக்குத் தாயகத்தில் புது வாழ்வு அளிக்க சில திட்டங்களை, புனர்வாழ்வளிக்கும் தனி அதிகாரி டி. எம். பி. தொண்டமான், மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளார் என்று தெரியவருகிறது.

இது குறித்து நிருபர்களிடம் கூறுகையில், இதுவரையில் மொத்தம் 30,000 தமிழர்கள் இலங்கையிலிருந்து தாயகத்திற்கு வந்துள்ளனர் என்றும், தன்னால் இயன்றவரை அவர்களுக்கு வேலைத் தேடித்தர முயற்சித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அவர்களுக்கென குடிசைத் தொழில்கள் துவக்கப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையிலிருந்து வெளியேறி தாயகம் வந்துள்ளவர்களுக்கு உருப்படியாக என்னதான் செய்யப்பட்டது என்பதைப் பற்றி ஒரு தகவலும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமைப் பதவியையும் இழந்துவிட்டார்!

கராச்சி, ஏப். 24—

பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் குடியரசுக் கட்சியின் தலைவராக பிரோஸ்கான் நூன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாராம்.

முன்னமேயே மேற்குப் பாகிஸ்தான் முதலமைச்சர் பதவியை இழந்த கான்சாகிப் இப்போது கட்சித் தலைமைப் பதவியையும் இழந்துவிட்டார்.

பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்களுக்கு

பாராட்டு விழா

28—4—57 மாலை 5-30 மணிக்கு, பென்ஷனர் லேன் திடலில் (பி & சி ஆலை அருகில்) தோழர் பி. வெங்கடாசலம் தலைமையில் மேற்படி பாராட்டுவிழா நடைபெறும்; அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களும் கலந்து கொள்வர்.

எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கு

தேநீர் விருந்து

29—4—57 மாலை 5½ மணிக்கு வன்னியகுல க்ஷத்திரியர் சங்கச் சார்பில், எம்.எல்.ஏ., எம்.பி.-க்களைப் பாராட்டி, சென்னை—பூந்தமல்லி ஐரோடிலுள்ள 'ஓட்டல் தாசப்பிரகாசா'வில் ஓர் தேநீர் விருந்து நடைபெறும்; அதுபோது, சென்னை முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களும் நிலவரி அமைச்சர் திரு. மாணிக்கவேலர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் கலந்துகொள்வர்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகட்கு:

வேண்டுகோள்:

"செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள எல்லா பழைய கிளைக் கழக—புதிய கிளைக் கழக நிர்வாகிகளும் தங்களின் முகவரிகளை, மாவட்டக் கழக முகவரிக்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்"

என செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் நி. ந. சம்பந்தம் அறிவிக்கிறார்.

இலங்கை தி. மு. க. பொதுச்செயலாளர்

தாயகம் வருகை

கொழும்பு, ஏப். 23—

இலங்கை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் திரு. ஜே. கே. கே. சுந்தரம் அவர்கள், இன்று விமானம் மூலம் திருவிடத்திற்குப் பிரயாணமானார்கள்.

அங்கு அவர் சில நாட்கள் தங்கி அண்ணா அவர்களையும், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் சந்தித்து, இலங்கை இந்தியர் நிலைபற்றி இந்தியப் பிரதமரும், இலங்கைப் பிரதமரும் அண்மையில் சந்தித்துப் பேச இருப்பது சம்பந்தமாக, ஆலோசனை நடத்துவார். (ந. - நி.)

சேலம் அரசாங்க பாங்கியில் திருட்டு

போலீசார் வழக்குப்பதிவு

சேலம், ஏப். 24—

சேலம் அரசாங்கப் பாங்கியில் ரூ. 1,60,000 காணாமல் போனது சம்பந்தமாக போலீசார் தீவிரமாகப் புலன் விசாரணைசெய்து வருகின்றனர்.

போலீஸ் டெபுடி இன்ஸ்பெக்டர்—ஜெனரல் ஏ. என். ராய் இன்று சேலத்திற்கு இது சம்பந்தமாக விசாரணை செய்ய வந்துள்ளார்.

காணாமல்போனவைகள் முழுவதும் பத்து ரூபாய் நோட்டுகள் என்று கூறப்படுகிறது.

நோட்டுகள் காணமற்போனது பற்றி, அவைகள் திருட்டுப்போனதாக ஒரு வழக்கு போலீசாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. (ந. நி.)

கழகக் கூட்டங்கள்

★

வேலூர்—

அரசமரம்பேட்டை:

கூடலூர் செங்கல்வராய முதலி தெருவில்

28—4—57 மாலை 6-மணிக்கு

தி. மு. கழக 5-வது ஆண்டு விழா

தலைவர்: மா. பா. சாரதி

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ

ப. கண்ணன்

★

கோபி:

பெரியார் திடல்

28—4—57 மாலை 7 மணிக்கு

பேசுவோர்:

சிற்றுளி-சுப்பிரமணியம்

★

அறந்தாங்கி — பாக்குடி:

அண்ணா திடல்

28—4—57 மாலை 5-மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: நா. மாரிமுத்து

பேசுவோர்:

அறிவுடைநம்பி

மு. க. மீரா

★

திண்டுக்கல்-நல்லம்பட்டி:

28—4—57 மாலை 7-மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: என். ஏ. பெருமாள்

பேசுவோர்:

என். முத்து

ஏ. சுப்பையா

பேரணை-முகதா

கே. ஆர். இரசாக்கான்

★

பாலக்கோடு:

அண்ணா முச்சந்தி

(ஸ்தூபி மைதானம்)

29—4—57

தலைவர்:

பி. எஸ். சையத்இப்ராகிம்

பேசுவோர்:

கண்ணதாசன்

இரா. சகன்னாதன்

★

லக்கம்பட்டி:

நல்லகவுண்டன் பாளையத்தில்

29—4—57 மாலை 7-மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

பேசுவோர்:

சிற்றுளி-சுப்பிரமணியம்

ஜி. ஏ. வேங்கிடாசலம்

க. அன்பழகன் அவர்களுக்குப் பாராட்டு

27—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை—எழும்பூர் (32-வது வட்ட) தி. மு. கழகச் சார்பில், எழும்பூர் ரங்காச்சாரி பூங்காவில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி, தோழர்கள் மு. கருணாநிதி, ப. உ. சண்முகம், க. அறிவழகன், மாணவி - சற்குணம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கண்ணதாசன்

சேலம் நிகழ்ச்சிகள்

28—4—57 காலை 9 மணி: பிரபாத் டாக்கீஸ் பின்புறம் உள்ள அருந்ததியர் தெருவில் கழகத் துவக்கவிழா;

காலை 10 மணி: பென்ஷன்லேன் மேட்டில் கொடியேற்றுவிழா;

காலை 11 மணி: சஞ்சீவிராயன் பேட்டை கழகத் துவக்கவிழா;

மாலை 3-30 மணி: தாதகாபட்டி மெயின்ரோடில் கழகத் துவக்க விழா.

இந்நிகழ்ச்சிகளில் நகர செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொள்வார்கள்.

எஸ். எஸ். தென்னரசு

நிகழ்ச்சிகள்

ஏப். 28: சித்தூர்

29: புத்தவேடு

மே 1: திருவள்ளூர்

5: குடியேற்றம்

ஆமதாபாத் தி. மு. கழக பொதுக் குழு

28—4—47 மாலை 6 மணிக்கு ஆமதாபாத்—மணிநகர் ச. சந்திரன் அவர்கள் இல்லத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும்; அதுபோது மே தின விழா நடத்துவது பற்றி ஆராயப்படும்.

சென்னை 32-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

28—4—57 பிற்பகல் 2 மணிக்கு கழகப் பணிமனையில், மேற்படி வட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது வரவு-செலவுக் கணக்கு ஆய்வுக்கு வரும்.

நெல்லை - திருவைகுண்டம் தி. மு. கழக உறுப்பினர்கட்கு:

28—4—57 காலை 10 மணிக்கு புதுக்குடியிலுள்ள மாவட்ட மன்ற ஒப்பு விடுதியில், பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் டபள்யூ. டி. துரைசாமி தலைமையில் நடைபெறும்; அதுபோது புது நிர்வாகிகள் தேர்வு நடைபெறும்.

திருச்சி—உறையூர் எம். ஜி. ஆர். படிப்பக உறுப்பினர் கூட்டம்

28—4—57 காலை 10-மணிக்கு திருச்சி—உறையூர், விக்டோரியா ரோட், எம். ஜி. ஆர். படிப்பக உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

காட்டுப்பாடி கொத்தனார்கள் தொழிற் சங்கம்

28—4—57ல் காட்டுப்பாடி தி. மு. கழக அலுவலகத்தில் மேற்படி தொழிற் சங்க பொறுப்பாளர் தேர்வு நடைபெறும்.

கலப்புத் திருமணமும் பொதுக்கூட்டமும்

28—4—57 மாலை 4½ மணிக்கு சென்னை—தொண்டையார்பேட்டை சேனியம்மன் கோயில் மைதானத்தில், தோழர் என். வீரநந்திரம் தலைமையில், தோழர் சி. எஸ். திராவிடமணி—தோழியர் அரங்கநாயகி வாழ்க்கை ஒப்பந்த விழாவும், பொதுக்கூட்டமும் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

28—4—57 காலை 9-மணிக்கு சென்னை — ஆல்வார்பேட்டை (46-வதுவட்ட) தி. மு. கழகச் சார்பில், 'திருவள்ளுவர்' சாலையிலுள்ள கழகப் பணிமனையில், தோழர் அ. கோ. நாராயணசாமி தலைமையில், 'நாடும்—மக்களும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை—கல்விச் சங்கம்

28—4—57 மாலை 5-மணிக்கு, பட்டாளம் ஸ்ட்ரான்ஸ் ரோடு ஆண்பள்ளியில், திரு த. வே. முருகேசனார் தலைமையில், திரு வ. சுப்பிரமணியம் அவர்கள் 'வள்ளுவர் வாக்கு' எனும் பொருள்பற்றிப் பேசுவார்.

ஊர்வலமும் — பொதுக்கூட்டமும்

28—4—57 காலை 10-மணிக்கு நெய்வேலி இரயில்வே ஸ்டேஷன் அருகிலுள்ள கொட்டகையில், நெய்வேலி சுரங்கத் திட்டப் பகுதியினால் பாதிக்கப்படும் மக்களின் பிரதிநிதிகள் கூட்டமும், மாலை 3-மணிக்கு கிராமங்களிலிருந்து ஊர்வலமும், பின்னர் பொதுக்கூட்டமும் நடைபெறும். பொதுக்கூட்டத்தில் பாராளுமன்ற — சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.